நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## செப். 4-ல் வம்பனில் சொட்டுநீர் பாசன பராமரிப்புப் பயிற்சி

First Published : 02 Sep 2012 05:09:25 PM IST

புதுக்கோட்டை, செப். 1 வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் சொட்டுநீர்ப் பாசன அமைப்பைப் பராமரிப்பது குறித்த பயிற்சி வருகிற செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 4) நடைபெறவுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் வி. கலைஅரசி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்தில் தண்ணீர் பற்றாக்குறையை சமாளித்து சிக்கனமாகப் பயன்படுத்தி, அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் தொழில்நுட்பமான சொட்டுநீர்ப் பாசனம் விவசாயிகளிடையே பிரபலமடைந்துள்ளது.

இதனால், தற்போது ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு, வாழை, மக்காச்சோளம், காய்கறிகள் மற்றும் பிற தானியப் பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசன கருவியை விவசாயிகள் அமைத்துள்ளனர். அதிக பொருள் செலவில் சொட்டுநீர் கருவியை அமைத்த பிறகு அதை சரியான முறையில் பராமரிக்காததால், சொட்டுநீர் அமைப்பில் உப்பு, மணல், தூசிகள் மற்றும் பாசிகள் படிந்து அடைப்பு ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் சீரற்ற அழுத்தத்தினால் நீர்ப்பாசனம் செய்யமுடியாமல் போய்விடும். இதை கருத்தில் கொண்டு இந்த முகாம் நடைபெறவுள்ளது. மேலும் விவரங்களுக்கு 04322- 290321 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

## நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை: பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்வு

First Published : 02 Sep 2012 05:00:41 PM IST

அம்பாசமுத்திரம், செப். 1:÷மேற்கு தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம், சேர்வலாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

நிகழ் பருவத்தில் பெய்ய வேண்டிய தென்மேற்குப் பருவமழை தாமதமாகத் தொடங்கி, கடந்த சில நாள்களாக திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில், சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பதிவான மழை:÷சனிக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 11 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ் அணையில் 26 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 10 மி.மீ. மழையும்,

கடனாநதி அணையில் 4.4 மி.மீ. மழையும், ராமநதி அணையில் 2 மி.மீ. மழையும், அம்பாசமுத்திரத்தில் 17.3 மி.மீ. மழையும், கல்லிடைக்குறிச்சியில் 50 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1008.68 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 30 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 96 கன
அடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 60 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

உயர்ந்து வரும் அணைகளின் நீர்மட்டம்:÷பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2.4 அடி உயர்ந்து 42.85 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்காக தாமிரவருணி ஆற்றில் 300 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் மதகில் 30 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 45.92 அடியாக உள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 61.19 அடியாக உள்ளது.

கடனாநதி அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 52.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 1.5 அடி உயர்ந்து 66.50 அடியாகவும் இருந்தது.

## நீர்வள, நிலவள திட்டப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு

First Published : 02 Sep 2012 12:51:39 PM IST

விழுப்புரம், செப்.1: விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நீர்வளம், நிலவளத் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் அண்மையில் ஆய்வு செய்தார்.

÷விழுப்புரம் மாவட்டத்தில் மயிலம், ஒலக்கூர், வானூர் உள்ளிட்ட ஒன்றியங்களில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, கால்நடை பராமரிப்புதுறை ஆகியவை சார்பில், உப வடிநிலப் பகுதிகளில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக வருமானம் பெற பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

÷இப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து கூட்டேரிப்பட்டு, நொளம்பூர், எண்டியூர் ஆகிய கிராமங்களில் உள்ள வணிக மையம், பசுந்தாளுர வயல்கள், சொட்டு நீர் பாசனம், பண்ணைக் குட்டை மீன் வளர்ப்பு ஆகியவற்றை ஆட்சியர் சம்பத் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

÷ஆய்வின் போது வேளாண்மைத் துறை விற்பனை மற்றும் வணிகத் துறை அலுவலர் பெரியசாமி, நேர்முக உதவியாளர்(விவசாயம்)ராஜசேகரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்(பொறுப்பு) கு.ராசு, உதவிப் பேராசிரியர்கள் அன்புமணி, பிரபு, மரக்காணம், ஒலக்கூர்

வேளாண்மை உதவி இயக்குநர்கள் ராஜசேகரன், ரவீந்திரன், சண்முகம் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## கரும்பு விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்

First Published : 02 Sep 2012 12:50:58 PM IST

உளுந்தூர்பேட்டை, செப்.1: திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் அரசூரில் கரும்பு விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

தலைமை கரும்பு அலுவலர் பாண்டியன் முன்னிலை வகித்தார். கோட்ட கரும்பு அலுவலர் தங்கமணி வரவேற்றார். பெரிய செவலை கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் அன்பரசு தலைமை வகித்து விளக்க உரையாற்றினார்.

இதில் திருநாவலூர், அரசூர், மடப்பட்டு, ஆனத்தூர், பேரங்கியூர், தென்மங்கலம், கருவேப்பிலைப்பாளையம், காந்தலவாடி உள்பட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று கரும்பு பயிரிடுவதால் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து கூறினர்.

மேலும், ஆலை நிர்வாகம் கரும்பு அரவையை முன்கூட்டியே தொடங்க வேண்டும். கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சொட்டு நீர் பாசனத்தின் மூலம் கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளிடம் விளக்கம் அளித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆலை நிர்வாகத்திடம் முன் வைத்தனர். கரும்பு உதவியாளர்கள் கோபாலகிருஷ்ணன், ராமகிருஷ்ணன், ரங்கசாமி, ராஜேந்திரன், பன்னீர்செல்வம், கருணாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மரக்கன்றுகள் நடும் விழா

First Published : 02 Sep 2012 09:37:52 AM IST

செங்குன்றம், செப்.1: சோழவரம் ஒன்றியம் புது எருமைவெட்டிப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்படும் நிகழ்ச்சி அண்மையில் நடந்தது.

÷புது எருமைவெட்டிப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெ.முனுசாமி தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் எஸ்.சங்கரலிங்கம் வரவேற்றார். சோழவரம் ஒன்றியக் குழுத் தலைவர் பி.கார்மேகம், துணைத் தலைவர் எம்.மாரி ஆகியோர் பள்ளி வளாகத்தில் 25 பலன் தரும் மரக்கன்றுகளை நட்டனர்.

÷இந்நிகழ்ச்சியில், ஊராட்சி மன்ற உறுப்பினர் பேபி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

÷உலக வெப்பமயமாதலைத் தடுக்கவும், மழை பெய்திடவும் மரக்கன்றுகளை வளர்க்க வேண்டும். வீட்டுக்கு ஒரு மரம் அவசியம் வளர்ப்போம் என்று உறுதி கொள்ள வேண்டும் என ஒன்றியக் குழுத் தலைவர் பி.கார்மேகம் கேட்டுக் கொண்டார்.

## விவசாயிகள் சங்க மாநாடு

First Published : 02 Sep 2012 05:54:07 PM IST

ஸ்ரீவில்லிபுத்தூர், செப். 1: ஸ்ரீவில்லிபுத்தூர் வட்ட, தமிழ்நாடு விவசாயிகள் சங்க 21-வது வட்டார மாநாடு சனிக்கிழமை தலைவர் ஆர்.ஞானகுரு தலைமையில் நடைபெற்றது.

வன விலங்குகளிடமிருந்து விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டும். விவசாய பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும். காயல்குடி ஆற்றுப் பகுதி நீர்வரத்து கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு உரம், பூச்சி கொல்லி மருந்து, விதை போன்ற இடு பொருட்கள் உரிய காலத்தில் கிடைக்க செய்ய வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் உள்ள யூனியன் கண்மாய்களை ஆழப்படுத்தி கரையை உயர்த்தி, ஷட்டர்கள், மடைகளை சீர் செய்ய வேண்டும். வேளாண் துறைகள் மூலம் கொடுக்கப்படக் கூடிய மானியங்களை அனைத்து விவசாயிகளுக்கும் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு வங்கி மூலம் பயிர் கடன், வாகன கடன் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

புதிய நிர்வாகிகள்: தலைவர்-பெருமாள், செயலாளர்-ஏ.மூர்த்தி, பொருளாளர்-சவுந்தர், துணை நிர்வாகிகள் கருப்பையா, வீராச்சாமி.

மாநாட்டில் மாவட்டத் தலைவர் ஏ.குருசாமி, பொருளாளர் கே.இசக்கி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் கே.அர்சுனன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பயிர்ப் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு முகாம்

First Published : 02 Sep 2012 05:09:03 PM IST

அரியலூர், செப். 1: தமிழக அரசின் வானிலைப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் மூலம், பயிர்களுக்கு காப்புறுதி வழங்குப்படுவது குறித்த விழிப்புணர்வு முகாம் திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் மொ.நா. பூங்கொடி பேசியது:

2012-13-ம் ஆண்டுக்கு முத்துசோளம், நெல், நிலக்கடலை, பருத்தி போன்ற பயிர்களுக்கு மத்திய, மாநில அரசின் வானிலைப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கப்படுகிறது.

ஈரப்பதம், புயல், வெள்ளம், மழை, வறட்சி போன்ற காரணங்களால் அழிவு, சேதம் ஏற்படுகிறது.

இதுபோன்ற காலங்களில் அரசின் அறிவிப்பின்படி, சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது.

எனவே, விவசாயிகள் வானிலைப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து முத்து சோளத்திற்கு ஏக்கருக்கு ரூ. 150, நெல்லுக்கு ரூ. 200, நிலக்கடலைக்கு ரூ. 600 பிரீமியம் செலுத்தி பயனடையலாம் என்றார் அவர்.

அரியலூர் வட்டாட்சியர் குணசேகரன், ஒன்றியக் குழுத் தலைவர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை வேளாண் அலுவலர் உலகநாதன், உதவி வேளாண் அலுவலர்கள் முருகன், ரமேஷ், கொளஞ்சி மற்றும் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர், வங்கி அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

திருமானூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) அருள் ராஜ் வரவேற்றார்.

## குறுவை சாகுபடி

First Published : 02 Sep 2012 11:20:22 AM IST

கடலூர், செப். 1: குறுவை சாகுபடி பொய்த்துப்போன காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் செயற்குழு ஆலோசனைக் கூட்டம் புலியூர் தோட்டத்தில் அண் மையில்

நடந்தது. கட்சியின் நிறுவனர் தி.வேல்முருகன் தலைமையில் நடந்த கூட்டத்தில், கர்நாடக அரசு காவிரி நீரை திறந்துவிடாததால் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பொய்த்துப் போயிருக்கிறது. பாதிக்கப்பட்டுள்ள காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி சிறப்பு அகதிகள் முகாம்கள் கொடூர வதை முகாம்களாகவே இருக்கின்றன. சிறப்பு அகதிகள் முகாம்களை இழுத்து மூடக் கோரி செந்தூரன் நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தமிழக அரசு செவிசாய்த்து தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

தமிழீழத்தில் பல லட்சம் தமிழர்களை படுகொலை செய்த சிங்கள ராணுவத்துக்கு, தமிழகத்தில் பயிற்சி தரும் மத்திய அரசின் செயலை வன்மையாகக் கண்டிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## விலையில்லா ஆடுகள்: அமைச்சர் ஆய்வு

First Published : 03 Sep 2012 10:03:35 AM IST

திருப்பரங்குன்றம், செப். 2: திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட எலியார்பத்தியில், விலையில்லா ஆடுகள் வளர்க்கும் பயனாளிகளிடம், கால்நடைத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

கடந்த மார்ச் மாதம், தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் பெற்ற சோளங்குறுணி மற்றும் எலியார்பத்தியைச் சேர்ந்த பயனாளிகளிடம், தமிழக கால்நடைத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா ஆய்வு நடத்தினார்.

அப்போது பயனாளிகளிடம், கால்நடைத் துறையினர் அவ்வப்போது வந்து ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கின்றனரா எனவும், அவைகளை கிராமத்தினர் பராமரிக்கும் விதம் குறித்தும் கேட்டார்.

மேலும், விலையில்லா ஆடுகள் ஈன்ற குட்டிகளையும், அவற்றை நன்றாகப் பராமரிக்கும் பயனாளிகளையும் அமைச்சர் பாராட்டினார். தீவனப் புல் வளர்க்கும் விவசாயிகளுக்கு, அரசு உதவித்தொகைகளையும் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். முத்துராமலிங்கம், தமிழரசன், கால்நடைத் துறை ஆணையர் தர்மேந்திர பிரதாப் யாதவ், மண்டல இணை இயக்குநர் ராஜசேகர், மாவட்ட ஊராட்சித் தலைவர் எம். தர்மராஜா, ஒன்றியத் தலைவர் நிர்மலாதேவி, துணைத் தலைவர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி சுகாதாரக் குழுத் தலைவர் முனியாண்டி, ஒன்றியச் செயலர் சுப்பிரமணி, பொதுக்குழு உறுப்பினர் இரா. முத்துக்குமார், நிர்வாகிகள் த. நேரு, பாசறை செல்வம் உள்பட பலர் இருந்தனர்.

## இறால் பண்ணைகளை பதிவு செய்ய ஆட்சியர் வலியுறுத்தல்

First Published : 03 Sep 2012 11:22:43 AM IST

காஞ்சிபுரம், செப். 2: கடலோர உவர்நீர் இறால் பண்ணைகளை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் ஹனீஷ் சாப்ரா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய இறால் பண்ணைகள் தொடங்குவோர் உடனடியாக பொன்னேரி நீர்வாழ் உயிரின வளர்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொண்டு முறையாக விண்ணப்பிக்க வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட பண்ணைகளுக்கு மான்ய உதவித் தொகை வழங்கப்படும். ஏற்கெனவே உரிமம் பெற்றுள்ளோர் 5 ஆண்டுகளில் உரிமம் காலாவதியாவதால் அதை புதுப்பிக்க வேண்டும்.

உரிமம் பெறாத மற்றும் புதுப்பிக்காத இறால் பண்ணைகள் சட்ட நடவடிக்கைகளுக்கு உள்படுத்தப்படும். இறால் பண்ணைகளை புதுப்பிப்பது தொடர்பாக 044 - 2797 1262 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

உண்மையின் உரைகல்

செப்டம்பர் 03,2012,00:20

**மஞ்சள் விலை ஏறுமா? விவசாயி விருப்பம் நிறைவேறுமா?**



ஈரோடு:வரும் டிசம்பரில் (மார்கழி), மஞ்சளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகளும், வர்த்தகர்களும் மஞ்சளை அதிக அளவில் இருப்பு வைத்து வருகின்றனர். ஆனால், தற்போதைய செயற்கையான விலையேற்றம் நீடிக்குமா? மஞ்சள் விலை உயர்வு சாத்தியமா என்ற கேள்விஎழுந்துள்ளது.

கையிருப்பு:சென்ற ஆண்டு, 100 லட்சம் மூட்டை (மூட்டை - 85 கிலோ) மஞ்சள் உற்பத்தியானது. இதில், 50 - 55 லட்சம் மூட்டைகள் ஏற்றுமதியானது போக, எஞ்சிய 45 லட்சம் மூட்டைகள் கையிருப்பில்உள்ளன.

நடப்பாண்டு மழை பொய்த்ததால், தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவில் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே நடவு செய்துள்ளனர். இருப்பினும், 50 லட்சம் மஞ்சள் மூட்டை வர வாய்ப்புள்ளது. கடந்தாண்டின் இருப்பை சேர்த்தால், 95 லட்சம் மூட்டைகளாகும். அதனால், மஞ்சள் விலையில்,

பெரியமாற்றம்இருக்காதுஎன்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

தயக்கம்:மழை வந்துவிடும் என எதிர்பார்த்து, கடந்த மே, ஜூனில் விவசாயிகள் அதிகளவில் மஞ்சளை விற்றனர். தற்போது, மழை பொய்த்ததால், விவசாயிகள் மஞ்சளை விற்கத் தயங்குகின்றனர். இருந்தும் சந்தைக்கு வரும் மஞ்சளை, வியாபாரிகள் மட்டுமின்றி, வேறு தொழில் புரிபவர்களும், சில அமைச்சர்களும் கூட வாங்கி இருப்பு வைக்கின்றனர். இதனால், ஜூலையில், 3,000 ரூபாய்க்கு விற்ற மஞ்சள், இன்று, 6,500 முதல் 7,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் செலவிட்டு மஞ்சள் சாகுபடி செய்வதை விட, ஒரு லட்சம் ரூபாய்க்கு மஞ்சளை வாங்கி வைத்தால், லாபம் கிடைக்கும் என, இருப்பு வைக்கின்றனர்.டிசம்பரில், மஞ்சள் விலை 10 ஆயிரம் ரூபாய்க்கு உயரும் வரை காத்திருந்து விற்றால், நல்ல லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கின்றனர். தற்போது, அகில இந்திய மஞ்சள் விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில், மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்ய, மாநாடு நடத்தி, 9,000 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்தபோதும், அதற்கு குறைவாகவேவிலைபோனது.

காத்திருப்பு:இந்தாண்டு பலரும், 70 சதவீத அளவிற்கு மஞ்சளை இருப்பு வைத்துள்ளதால், விலை சற்று ஏறி, இறங்கினாலும், பெரியளவில் விலையேற்றம் ஏற்படவில்லை. இரண்டாண்டுகளுக்கும் மேல், மஞ்சளை இருப்பு வைக்கலாம் என்பதால், விவசாயிகளும், வியாபாரிகளும் காத்திருக்கின்றனர்.இருப்பினும், கடந்த, 2010 போல, மஞ்சள் விலை 17 ஆயிரம் ரூபாயை எட்டும் என்ற நம்பிக்கை, விவசாயிகளிடம் இல்லை. இந்நிலையில், செயற்கையாக விலையேற்றத்தை உருவாக்க நினைப்போர், வதந்திகளை பரப்பி வருகின்றனர்.

செப்டம்பர் 03,2012,00:18

**நெல் உற்பத்தி 6 சதவீதம் குறையும்**



xபுதுடில்லி:நடப்பு கரீப் பருவத்தில், நாட்டில் நெல் விளையும் பல முக்கிய பகுதிகளில் பருவமழை குறைந்துள்ளது. இதையடுத்து, நடப்பு 2012-13ம் வேளாண் பருவத்தில் (ஜூலை-ஜூன்), இந்தியாவின் நெல் உற்பத்தி, 6 சதவீதம் சரிவடைந்து, 9.85 கோடி டன்னாக இருக்கும் என, அமெரிக்க வேளாண் அமைப்பு தெரிவித்துள்ளது.கடந்த 2011-12ம் வேளாண் பருவத்தில், நாட்டின் நெல் உற்பத்தி, முன் எப்போதும் இல்லாத அளவாக, 10.43 கோடி டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மொத்த வேளாண் சாகுபடி பரப்பில், நீர்பாசன வசதி பெற்றுள்ள நிலப்பரப்பின் பங்களிப்பு 45 சதவீதம் என்ற அளவில் உள்ளது. மீதமுள்ள நிலப்பரப்பு, ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான பருவமழை பொழிவை சார்ந்துள்ளது.நடப்பு கரீப் பருவத்தின், ஆகஸ்ட் 24ம் தேதி வரையிலான காலத்தில், நெல் பயிரிடும் பரப்பளவு 4 சதவீதம் குறைந்து, 329.19 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் உள்ளது.

இது, கடந்த ஆண்டு இதே காலத்தில், 342 லட்சம் எக்டேராக அதிகரித்துக் காணப்பட்டது.நடப்பு 2012ம் ஆண்டு, ஆகஸ்ட் 1ம் தேதி வரையிலான காலத்தில், நாட்டின் உணவு தானிய கையிருப்பு 7.61 கோடி டன்னாக உள்ளது. இது, கடந்த ஆண்டு இதே காலத்தில், 6.13 கோடி டன்னாக இருந்தது. எனவே, இந்தியாவின் உணவு தானிய கையிருப்பு, போதுமான அளவிற்கு உள்ளது என, அமெரிக்க வேளாண் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## வைகை ஆற்றில் நீர் வரத்து விவசாயிகள் மகிழ்ச்சி

செப்டம்பர் 03,2012,04:41 IST

வருஷநாடு: பல மாதங்களுக்கு பிறகு வைகை ஆற்றில் நீர் வரத்து துவங்கியுள்ளதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடமலை-மயிலை ஒன்றியத்தில் 18 ஊராட்சிகளுக்கு குடிநீர் ஆதாரமாக இருப்பது வைகை ஆறு. இந்தாண்டு மழை பெய்யாததால் நீர் வரத்து இல்லாமல் பாலைவனமாக வறண்டு கிடந்தது. இதனால் தினந்தோறும் மக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யமுடியாமல் ஊராட்சி நிர்வாகத்தினர் சிரமத்திற்குள்ளாகினர்.விவசாய நிலங்களில் நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பலர் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் வைகை உற்பத்தி இடமான பூலாமலை,வெள்ளிமலை, அரசரடி, அஞ்சரபுலி பகுதிகளில் பெய்த கன மழையினால் வைகை அணையில் இருந்து நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. வாலிப்பாறை பகுதிகளில் மழை பெய்யாமலே வைகை ஆற்றில் தண்ணீர் வருவதை பார்த்து மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உரங்களுக்கு திடீர் தட்டுப்பாடுகம்பம் விவசாயிகள் கவலை

செப்டம்பர் 03,2012,04:42 IST

கம்பம்:உரங்களுக்கு திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில், 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பெரியாறு பாசனத்தில் நெல் சாகுபடி என்பது, கடந்த ஒரு நூற்றாண்டாக விவசாயிகளால் மேற்கொள்ளப்படுகிறது.இந்தாண்டு தென்மேற்கு பருவமழை ஏமாற்றி விட்டது. பெரியாறு அணையில் போதிய அளவு நீர் மட்டம் இல்லை. இப்போது தான் நாற்றுகள் நடவு செய்கின்றனர். கம்பம் பகுதியில் மட்டும் நடவு முடிந்து ஒரு மாதத்தை கடந்துள்ளது. மேலுரமாக பொட்டாஷ், யூரியா மற்றும் வேப்பம் புண்ணாக்கு,ஏக்கருக்கு 15 கிலோ இட வேண்டும். பொட்டாஷ் இடுவதால், பூச்சிகள் தாக்குதல் இருக்காது. நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். நெல் மணிகள் நன்றாக இருக்கும். பொட்டாஷ் மற்றும் யூரியா உரங்களுக்கு திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஒருசிலர் பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்று வருகின்றனர். விவசாயத்துறை அதிகாரிகளும் கண்டுகொள்ளாமல் உள்ளனர். விவசாயிகள் கேட்டால், " உரம் கிடைக்காததற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்"' என்று எதிர் கேள்வி எழுப்புகின்றனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

செப்டம்பர் 03,2012,01:08 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் லில்லி தலைமையில்நடந்தது.இதில், விவசாயிகளுக்கு உரிய ஆவணங்களை பெற்று, பயிர் கடன் வழங்க கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கு, கலெக்டர் லில்லி உத்தரவிட்டார். சொட்டுநீர் பாசனம் செய்திட சிறு, குறு விவசாயிகளுக்கு, 43,816 ரூபாய் மதிப்பிலான சொட்டுநீர் பாசன கருவிகள், 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு, ஐந்து ஹெக்டேர் வரை, 75 சதவீத மானியத்திலும், தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண் துறையின் மூலம் வழங்கப்படுகிறது.நடப்பு ஆண்டில் தோட்டக்கலை துறை சார்பில், 977 பேருக்கு, 423 ஹெக்டேரிலும், வேளாண் துறையில், 199 பேருக்கு ,79 ஹெக்டேரிலும் சொட்டுநீர் பாசனம் அமைத்திட விண்ணப்பித்தை தொடர்ந்து, இரண்டு துறைகளுக்கும் சேர்த்து, 1,176 சிறு, குறு வவசாயிகளுக்கு, 502 ஹெக்டேரில், 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட உள்ளதாஅலுவலர்கள்தெரிவித்தனர்.

கேசர்குளி அணையில் நீர்தேக்கப் பாசன கால்வாய்களில் உள்ள முட்புதர்களை அகற்றவும், கால்வாய் தூர்வாரவும், ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் தெளிப்பான் கருவி பெறுவதற்கு தங்கள் கிராமத்திற்கு உட்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் தங்கள் கிராமத்திற்கு உட்பட்ட வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தில், மூதுரிமை பட்டியலில் விவசாயிகள் தங்களது பெயர்களை பதிவு செய்ய வேண்டும், என அதிகாரிகள் தெரிவித்தனர்.வாணியாறு நீர்த்தேக்க திட்ட பழைய ஆயகட்டு பகுதிகளுக்காக, ஆலாபுரம் ஏரியின் மதகு மற்றும் தென்கரைக்கோட்டை ஏரி மதகு பழுதுபார்க்கும் பணிகள் குறித்த விவரங்கள், விவிசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. காட்டுப்பன்றி உள்ளிட்ட விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு, உரிய இழப்பீட்டு தொகை வழங்குவதற்கு வனத்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.இணை இயக்குனர் (வேளாண்) மனோகரன், கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்) கக்கன், தோட்டக்கலைத்துறை, கூட்டுறவு துறை அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மல்பரியில் இலைப்பேனை கட்டுப்படுத்த அறிவுரை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,00:59 IST

கிருஷ்ணகிரி: மல்பரியில், இலைப்பேன்கள் தாக்குதலை கட்டுப்படுத்த, "கிரைசோப்பா' புழுக்களை வயல்களில் விட வேண்டும், என்று கிருஷ்ணகிரி மத்திய பட்டுவாரிய விஞ்ஞானிகள் மாசிலாமணி, பாலசரஸ்வதி ஆகியோர் தெரிவித்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 1,000 ஹெக்டேருக்கு மேல் மல்பெரி சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, சாகுபடி செய்யப்பட்டுள்ள மல்பரியில், இலைப்பேன்கள் தாக்குதல் அதிகரித்துள்ளது.இலைப்பேன்கள், தளிர் மல்பரி இலையின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு, சாற்றை உறிஞ்சுவதால், நீர் மற்றும் இதர சத்துகள் குறைந்து இலைகள் முதலில் வெளிறிய கோடுகளுடனும், பின்னர் பச்சை நிறம் இழந்து சருகு போல மாறி விடுகிறது. இதனால் மல்பரியில் மிகுந்த சேதாரம் ஏற்படும். இலைப்பேன்களை கட்டுப்படுத்த, மல்பரி தோட்டத்தில் பச்சை கண்ணாடி பூச்சி எனப்படும் "கிரைசோப்பா' என்ற நன்மை தரும் பூச்சியை விடவேண்டும். இந்த பூச்சி, முட்டை அட்டைகளை ஒரு ஏக்கருக்கு, 1,000 முட்டைகள் என்ற அளவில் மல்பரி தோட்டத்தில் விடவேண்டும். ஒரு கிரைசோப்பா புழு தனது ,14 வது வாழ்நாளில், 250 முதல், 300 இலைப்பேன்களை உண்டு அழிக்கும். கிரைசோப்பா விழுங்கிகள் விடப்பட்ட தோட்டத்தில் கட்டாயம் பூச்சி கொல்லி மருந்து தெளிப்பு செய்யக்கூடாது.மேலும், இந்த வகை பூச்சிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளான மாவுப்பூச்சி,

வெள்ளை ஈ, செதில் பூச்சி போன்றவற்றையும் அதன் முட்டை மற்றும் இளம் புழுக்களையும் உண்டு அழிக்கும் திறன் வாய்ந்தது. கிரைசோப்பா பூச்சிகள் ஓசூரில் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் கிரைசோப்பா பூச்சிகளை வாங்கி, தோட்டத்தில் விட்டு உயிரியல் முறையில் இலைப்பேன்களை அழிக்கலாம்.இது குறித்து மேலும் விவரங்கள் அறிய விரும்புவோர், 99946-22647 என்ற மொபைல் ஃபோன் எண்ணிலும், 04343-293744 என்ற டெலிஃபோன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,01:48 IST

சத்தியமங்கலம்: நீலகிரி மலைப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில் பதினைந்தடி சகதிகள் கழித்து, நீர்பிடிப்பு மொத்த உயரம், 105 அடியாகும். இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்தே பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் மழையில்லாததால், பவானிசாகர் அணைக்கு சொற்ப அளவு தண்ணீர் மட்டுமே வந்தது.அதே சமயம் அணையில் இருந்து பாசனத்துக்காக கீழ்பவானி வாய்க்கால் மற்றும் பவானி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் அணையின் நீர்மட்டம் குறைந்து கொண்டே வந்தது. இதனால் அணை வற்றிப்போய் குடிநீர் பிரச்னை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. இதற்காக தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் மற்றும் வருவாய்துறை அமைச்சர் வெங்கடாசலம் ஆகியோர் தலைமையில் விவசாயிகள் மழைவேண்டி கடந்த மாதம் அணையின் மேற்பகுதியில் யாகம் நடத்தினர். பில்லூர் அணையில் இருந்தும் பவானிசாகர் அணைக்கு இரண்டு நாட்கள் முன்பு தண்ணீர் திறக்கப்பட்டது.இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக நீலகிரி மலைப்பகுதியில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பவானிசாகர் அணைக்கு பவானி ஆறு மற்றும் மோயாறுகளில் வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. நேற்று காலை பவானிசாகர் அணைக்கு வினாடிக்கு, 3,260 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.அணையில் இருந்து நேற்று காலை எட்டு மணிமுதல் பவானி ஆற்றில் வினாடிக்கு, 200 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, ஐந்து கனஅடி தண்ணீர் செல்கிறது. நேற்று அணையின் நீர்மட்டம், 42 அடியாக இருந்தது. கடந்த மாதம், 28ம் தேதி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 35 அடியாக இருந்தது.ஐந்து நாட்களில் ஆறு அடி உயர்ந்துள்ளது ஈரோடு மாவட்ட விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## கால்நடை மருத்துவ முகாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,06:24 IST

பந்தலூர்:பந்தலூர் அருகே சன்னக்கொல்லியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.முதல்வர் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், அய்யன்கொல்லி அருகே சன்னக்கொல்லி பகுதியில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. ஊரக கால்நடை பராமரிப்புத்துறை டாக்டர் ரேணுகாதேவி வரவேற்றார். உதவி இயக்குனர் டாக்டர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் உட்பட சிகிச்சைகள் செய்யப்பட்டு, கால்நடை வளர்ப்போருக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. முகாமில், டாக்டர்கள் சுரேஷ்குமார், பிரபு, காளியப்பன், வெள்ளிங்கிரி, கால்நடை ஆய்வாளர்கள் கமல்பாபு, அடைக்கலம், பராமரிப்பு உதவியாளர்கள் நந்தகோபால், ராஜேந்திரன், ஜாஸ்மின், பத்மநாபன் ஆகியோர் கொண்ட குழுவினர் சிகிச்சையளித்தனர். சிறந்த கால்நடைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## தேயிலை ஏலத்தில் விலை ஏற்றம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,06:25 IST

குன்னூர்:குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் ஏல மையத்தின் 35வது ஏலத்தில் மொத்தம் 10.19 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், 7.39 லட்சம் கிலோ இலை ரகம், 2.80 லட்சம் கிலோடஸ்ட் ரகம் அடங்கும். 92 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. இதில் 9 லட்சத்து 37 ஆயிரத்து 480 கிலோ தேயிலை தூள் விற்பனையானது. கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் விலைஏற்றம்கிடைத்தது.

சாதாரண இலை ரகம் கிலோ ஒன்று 62 முதல் 68 ரூபாய் வரையிலும், உயர் வகை 100 முதல் 125 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகம் சாதாரண வகை 79 முதல் 83 ரூபாய் வரையிலும், உயர் வகை 100 முதல் 140 ரூபாய் வரையிலும் விற்பனையானது. "சிடிசி' ரகம் அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் தேயிலை தூள் 167 ரூபாய்க்கும், ஆர்தோடக்ஸ் ரகத்தில் சாம்ராஜ் எஸ்டேட் தூள் கிலோ ஒன்று 201 ரூபாய்க்கு விற்பனையானது. வரும் 6 , 7ம் தேதிகளில் நடக்கும் 36வது

ஏலத்தில் 12.76 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 9.38 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.38 லட்சம் கிலோவும் அடங்கும்.

## விவசாயத்துக்கு 15 மணிநேர மும்முனை மின்சாரம்: ஒன்றிய மாநாட்டில் தீர்மானம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,01:13 IST

தா.பேட்டை: விவசாயத்துக்கு 15 மணிநேர மும்முனை மின்சாரம் வழங்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள், விவசாய சங்கத்தின் ஒன்றிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

திருச்சி மாவட்டம் தா.பேட்டையில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஒன்றிய மாநாடு நடந்தது. வார்டு கவுன்சிலர் காமராஜ் வரவேற்றார். உறுப்பினர்கள் நடராஜன், ரெங்கராஜ், முத்துசாமி, செல்வராஜ், சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மாசிலாமணி, மாவட்ட தலைவர் சிதம்பரம், மாவட்ட குழு உறுப்பினர் சுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் முருகேசன் ஆகியோர் பங்கேற்று பேசினர்.மாநாட்டில் தா.பேட்டை யூனியன் பகுதியை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும், புளியஞ்சோலை முதல் மகாதேவி ஏரிவரை, புதிய வாய்க்கால் அமைக்க வேண்டும். குடிநீர் பற்றாக்குறையாக உள்ள கிராமங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து போர்க்கால அடிப்படையில் குடிநீர் வழங்க வேண்டும். மான்ய விலையில் மாட்டு தீவனம் வழங்க வேண்டும், விவசாயத்துக்கு மும்முனை மின்சாரத்தை 15 மணி நேரம் வழங்கிடவும், பழுதடைந்த தொகுப்பு வீடுகளை பராமரிப்பு செய்ய நிதிஒதுக்க வேண்டும். மேலும் தா.பேட்டை பகுதியில் ஜவ்வரிசி ஆலை அமைக்க வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. இதில் விவசாய சங்கத்தினர் பங்கேற்றனர்.

## திருந்திய நெல் சாகுபடியை ஊக்குவிக்க மானியம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,01:13 IST

திருச்சி: ""நெல் சாகுபடியில் இரட்டிப்பு மகசூல் பெற, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை ஊக்குவிக்க, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு 3,000 ரூபாய் இடுபொருட்கள் மான்யமாக வழங்கப்படும்," என கலெக்டர் ஜெயஸ்ரீ பேசினார். திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்து பேசியதாவது:திருச்சி மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி இதுவரை 5,625 ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டது. சம்பா தாளடி சாகுபடி 60 ஆயிரம் ஹெக்டேரில் எதிர்பார்க்கப்படுகிறது. நற்று விடுவதற்கான ஆயத்த பணிகள் துவங்கியுள்ளது. இம்மாவட்டத்தில் சம்பா பட்டத்துக்கு ஏற்ற அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களான மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஏ.எஸ்.டி. 19, ஏ.டி.டி., 39, கோ (ஆர்) 49, கோ (ஆர்) 50 மற்றும் பி.பி.டி., 5204 போன்ற ரகங்களின் சான்று பெற்ற விதைகள் 581.486 மெட்ரிக் டன், அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு, இதுவரை 43.950 மெட்ரிக் டன் விநியோகிக்கப்பட்டுள்ளது.நெல் சாகுபடியில் இரட்டிப்பு மகசூல் பெற, ஒற்றை நெல் நாற்று நடவு முறையான, திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை ஊக்குவிக்க, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு 3,000 ரூபாய் மதிப்பீட்டில் இடுபொருட்கள் மான்யமாக வழங்கப்பட உள்ளது.

விதை கிராம திட்டத்தின் கீழ் நெல் சிறுதானியம் பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களின் சான்று பெற்ற விதைகளுக்கு 50 சதம் மான்யம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் துவரையில் நாற்றுவிட்டு நடவுமுறை சாகுபடி செயல் விளக்கத்துக்கு 15 ஆயிரம் ரூபாய் மான்யத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது. தற்போது நாற்று விடுவதுக்கான இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்ய தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் 2,000 வீரிய ஒட்டு சோளம் சி.எஸ்.ஹெச்.,14 சிறுதளைகள் மணப்பாறை மற்றும் வையம்பட்டி வட்டாரத்தில் வழங்கப்படுகிறது.குறுவை, சம்பா பருவத்துக்கு தேவையான இடுபொருட்கள், உயிர் உரங்கள், அசோஸ்பைரில்லம், பாஸ்போ, பாக்டீரியா போதுமான அளவு வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறுவையில் இரட்டிப்பு மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையில் விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்.குறுவை மற்றும் சம்பா பருவத்துக்கு தேவையான

உரங்களான யூரியா 3,485 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 1,980 மெட்ரிக் டன், பொட்டாஷ் 2,820 மெட்ரிக் டன், கலப்பு உரம் 3,955 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. வேளாண் பொறியியல் துறை மூலம் நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மண் தள்ளும் இயந்திரம் வாடகைக்கு விடப்படுகிறது. உழுவை வாடகை திட்டத்தின் கீழ் உழுவை இயந்திரம் வாடகைக்கு விடப்படுகிறது. முதல்வர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக உள்ளவரின் குழந்தைகளுக்கு கல்வி, திருமணம், விபத்து நிவாரணம், இயற்கை மரணம் போன்ற உதவித்தொகை, ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.இவ்வாறு அவர் பேசினார்.கூட்டத்தில் டி.ஆர்.ஓ., தியாகராஜன், வேளாண் இணை இயக்குனர் சேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) பாண்டியராஜன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் (பொறுப்பு) லட்சுமணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

விவசாய பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,05:45 IST

தாடிக்கொம்பு:தாடிக்கொம்பு பேரூராட்சி நந்திகோயில்பட்டியில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. திண்டுக்கல் வேளாண்மை <உதவி இயக்குநர் அருள் அரசு தலைமை வகித்தார். பேரூராட்சி துணைத் தலைவர் சுப்பிரமணி முன்னிலை வகித்தார். பயிற்சியில் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர். பயிற்சியின் போது இயற்கை உரம் தயாரித்தல் குறித்து விளக்கப்பட்டது. மதுரை வேளாண்மை கல்லூரி காட்டுமடம் குழுவை சேர்ந்த மாணவிகள் கலந்து கொண்டு செயல்முறை விளக்கம் செய்து காட்டினர்.ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் சின்னசாமி, உதவி வேளாண்மை அலுவலர் கண்ணபிரான் செய்திருந்தனர்.

உரங்களுக்கு திடீர் தட்டுப்பாடுகம்பம் விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,04:42 IST

கம்பம்:உரங்களுக்கு திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில், 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பெரியாறு பாசனத்தில் நெல் சாகுபடி என்பது, கடந்த ஒரு நூற்றாண்டாக விவசாயிகளால் மேற்கொள்ளப்படுகிறது.இந்தாண்டு தென்மேற்கு பருவமழை

ஏமாற்றி விட்டது. பெரியாறு அணையில் போதிய அளவு நீர் மட்டம் இல்லை. இப்போது தான் நாற்றுகள் நடவு செய்கின்றனர். கம்பம் பகுதியில் மட்டும் நடவு முடிந்து ஒரு மாதத்தை கடந்துள்ளது. மேலுரமாக பொட்டாஷ், யூரியா மற்றும் வேப்பம் புண்ணாக்கு,ஏக்கருக்கு 15 கிலோ இட வேண்டும். பொட்டாஷ் இடுவதால், பூச்சிகள் தாக்குதல் இருக்காது. நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். நெல் மணிகள் நன்றாக இருக்கும். பொட்டாஷ் மற்றும் யூரியா உரங்களுக்கு திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஒருசிலர் பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்று வருகின்றனர். விவசாயத்துறை அதிகாரிகளும் கண்டுகொள்ளாமல் உள்ளனர். விவசாயிகள் கேட்டால், " உரம் கிடைக்காததற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்'" என்று எதிர் கேள்வி எழுப்புகின்றனர்.

## வைகை ஆற்றில் நீர் வரத்து விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,04:41 IST

வருஷநாடு: பல மாதங்களுக்கு பிறகு வைகை ஆற்றில் நீர் வரத்து துவங்கியுள்ளதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடமலை-மயிலை ஒன்றியத்தில் 18 ஊராட்சிகளுக்கு குடிநீர் ஆதாரமாக இருப்பது வைகை ஆறு. இந்தாண்டு மழை பெய்யாததால் நீர் வரத்து இல்லாமல் பாலைவனமாக வறண்டு கிடந்தது. இதனால் தினந்தோறும் மக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யமுடியாமல் ஊராட்சி நிர்வாகத்தினர் சிரமத்திற்குள்ளாகினர்.விவசாய நிலங்களில் நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பலர் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் வைகை உற்பத்தி இடமான பூலாமலை,வெள்ளிமலை, அரசரடி, அஞ்சரபுலி பகுதிகளில் பெய்த கன மழையினால் வைகை அணையில் இருந்து நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. வாலிப்பாறை பகுதிகளில் மழை பெய்யாமலே வைகை ஆற்றில் தண்ணீர் வருவதை பார்த்து மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பெரியாறு அணையில்உயரும் நீர்மட்டம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,04:36 IST

கூடலூர்:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், பெய்து வரும் மழையால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.தென்மேற்கு பருவ மழை பொய்த்து விட்ட போதிலும், பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், தாமதமாக பெய்து வரும் மழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கத் துவங்கியுள்ளது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால், நீர்வரத்து

அதிகரித்து 1042 கன அடியாக இருந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து, நேற்று காலை நிலவரப்படி, 118.40 அடியாக இருந்தது. அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு 150 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. நீர் இருப்பு 2339 மில்லியன் கன அடியாகும். பெரியாறில் 12 மி.மீ., தேக்கடியில் 7.2 மி.மீ., மழை, கூடலூரில் 1.2 மி.மீ., மழை பதிவாகியது. அணை நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையில் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

## வெளி மார்க்கெட்டில் கொப்பரை விலை தொடர் சரிவு

பதிவு செய்த நேரம்:2012-09-03 10:11:31

பொள்ளாச்சி, : பொள் ளாச்சி பாலக்காடு ரோட்டில் உள்ள நல்லூரில் வேளாண்மை கூட்டுறவு சங்கமும், நெகமம், ஆ¬ னமலை, திம்மம்குத்து, கிணத்துக்கடவு உள்ளிட்ட பகு தியில் ஒழுங்குமுறை விற்ப னை கூடங்களும் உள்ளன. விவசாயிகள் உற்பத்தி செய்யும் கொப்பரை மட்டுமின்றி மக்காசோளம், நெல் உள்ளிட்ட வேளாண் உற்பத்தி பொருட்களும் கொண்டு வருகின்றனர். இதில் நெகமம், ஆனைமலை, கிணத்துக்கடவு திம்மம்குத்து உள்ளிட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தேறும் விவசாயிகள் கொண்டுவரும் கொப்பரை, ஏலம் விடப்படுகிறது. இதை வியாபாரிகள் குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்து வாங்கி செல்கின்றனர். அரசு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு உரிய விலை இல்லாததால், வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பனை செய்ய துவங்கினர். கடந்த சில ஆண்டுகளாக ஒழுங்குமுறை விற்ப னை கூடங்களில் அதிகபட் ச விலையாக ஒரு கிலோ கொப்பரை ரூ.36.20 ஆக இருந்தது. விலை கட்டுப்படியாகாததால் விவசாயிகள் வெளிமார்க்கெட்டில் ரூ.40 முதல் ரூ.45 வரை விற்பனை செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு வேளண் கூட்டுறவு சங்கம் மற்றும் விற்பனை கூடங்களில் ஒருகிலோ கொப்பரை ரூ.51 என அரசு நிர்ணயம் செய் தது.இதையடுத்து விவசாயிகள் வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு கொப்பரை கொண்டுவர ஆரம்பித்தனர். இதை தொடர்ந்து வெளிமார்க்கெட்டிலும் கொப்பரை விலையை வியாபாரிகள்

உயர்த்தினர்.

வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை உயர்த்தப்பட்டதையடுத்து, ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் கொ ண்டுவரும் கொப்பரைக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. நெகமம் மற்றும் ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கடந்த ஒருமாதத்திற்கும் மேலாக நடந்த ஏல நாட்களில் விவசாயிகள் அதிகளவில் கொப்பரை கொண்டுவந்தனர். ஒவ்வொரு வாரமும் ஏலத்தின் போது விலை ஏறிகொண்டே சென்றது. விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் கடந்த ஒரு மாத மாக ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கொப்பரை விலை சற்று குறைவாக காணப்பட்டதால் கொ ப்பரை வரத்தும் குறைந்தது. பொள்ளாச்சி மற்றும் சுற்றுவட்டார கிராமங் களில் இருந்து விவசாயிகள் கொண்டுவரும் கொப்பரை அளவு குறைந்ததுள்ளது. கடந்த ஏப்ரல் மாத இறுதியில் வெளிமார்க்கெட்டில் முதல்தர கொப்பரை ரூ.48 முதல் ரூ.55 வரை கொ ள்முதல் செய்யப்பட்டது. ஆனால் இம்மாதம் வெளிமார்க்கெட்டில் அதிகபட்ச விலையாக ரூ.41 வரை மட்டுமே போகிறது.

வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு விலை இல்லாததால், அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடங்களிலும் விசாயிகள் கொண்டுவரும் கொப்பரைக்கும் விலையில்லாமல் போனது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு விவசாயிகள் கொண்டுவரும் கொப்பரை முதல் தரம் ரூ45 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ரூ40 வரையிலும் ஏலம்போனது. ஆனால் தற்போது வெளிமார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள விலை சரிவால் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும் கொப்பரை ஏலத்தொகை குறைந்தது. தற்போது ஒரு கிலோ முதல்தர கொப்பரை அதிகபட்சமாக ரூ.37.50 வரை யிலும், இரண்டாம் தர கொ ப்பரை ரூ.35க்கும் குறைவான தொகைக்கு ஏலம் போகிறது, என்று கூட்டுறவு விற்பனை கூட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கொப்பரைக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## பழ விளைச்சல் பாதிப்பு

பதிவு செய்த நேரம்:2012-09-03 10:10:29

குன்னூர், :நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு வகை பழ மரங்கள் கடந்த காலங்களில் வளர்க்கப்பட்டு வந்தது. இதனை நம்பி விவசாயிகள் பயன் பெற்று வந்தனர். குறிப்பாக வருவாய் அதிகளவில் கிடைத்ததால் ஆரஞ்சு பழ விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்பட் டது. பல்வேறு நோய்களால் பழ செடிகள் காய்ந்து முழுமையாக ஆரஞ்சு விவ சாயமே அழிந்து விட்டது. வனத்தை ஒட்டிய பகுதிகளில் முன்னர் கிடைத்து வந்த தவிட்டு பழமும் தற் போது கிடைப்பது அரிதாகி வருகிறது. சுற்றுலா பயணி கள் அதிகம் விரும்பி வாங்கி செல்லும் ஊட்டி காளான் வரத்தும் குறைந்துள்ளது. அதே போல் நாவல் பழ மரங்கள் அதிகளவில் வளர்க்கப்பட்டு வந்தது. சாலையோரங்கள், தேயிலை செடிகளிடையே ஊடுபயிராக வளர்க்கப்பட்டது. இதனால் பல்வேறு வகையிலான நாவல் பழங்கள் வியாபாரத்திற்கு வந்தது. ஆனால் நாவல் மரங்களை

வெட்டுவதற்கு வனத்துறை நிபந்தனையை விலக்கி கொண் டன. எனவே 90 சதவீத மரங்கள் வெட்டி அகற்றப்பட் டது. எனவே பழம் வரத்து அதிகளவில் குறைந் தது. மாவட்டத்தில் விளைந்த பிளம்ஸ் உள், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பழ மரங்களில் நோய் காரணமாக மகசூல் குறைந்த வருகிறது. பட்டு போன மரங்கள் தற்போது விறகிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

யானைகள் தொந்தரவு காரணமாக பலாப்பழ மரங்கள் அதிகளவில் வனத்துறையினர் அறிவுறுத்தலின் பேரில் வெட்டப்பட்டுள்ளது. போதிய மழையின்மை காரணமாக துரியன் பழ மரங்களிலும் காய்ப்பு தன்மை குறைந்து காணப்படுகிறது.

தமிட்டா, வால் பேரி, கமலா ஆரஞ்சு, நெல்லிக்காய், சீதா பழம் போன்றவை மட்டுமே இம்மாவட்டத்தில் விளைவிக்கப்படுகிறது. இவற்றுக்கும் போதிய வருவாய் கிடைப்பதில்லை. எனவே இவற்றை பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் வரும் நாட்களில் பல்வேறு வகை பழங்களின் விளைச்சல் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.